www.padippakam.com

# தமிழீழப் போராட்டமா? தனிநபர் பழிவாங்கலா?

அண்மையில் 'யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. ஆனந்தராஜா ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார்' என்ற செய்தி பேரிடியாக வந்து விழுந்தது. இந்தச் செயலை யார் செய்தது என்று தமிழீழ மக்களும், மாணவர் சமுதாயமும் ஆராய்ந்து கொண்டிருந்த நேரத்தில் ''நாங்கள்தான் செய்தோம்'' என்று பெரிய வீரதீர சாகசமாக அதை உரிமை கோரியுள்ளார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர். இந்தப் பிற்போக்குத்தனமான படுகொலையை நியாயப்படுத்த அவர்கள் கூறியுள்ள காரணங்களில் முக்கியமானவை.

(1) அவர் இராணுவத்தை அழைத்து மாணவர்களுடன் கால்பந்தாட்டம் நடாத்தினார்.

(2) இராணுவத்தினருடன் நல்லுறவை வளர்ப்பதற்கு விடுதலைப் போராளிகள் பற்றிய தகவல்களைக் கொடுத்தார்.

என்பதாகும். உண்மையில் திரு. ஆனந்தராஜா அவ்வாறு நடந்திருப்பாரா என்பதை ஆராய்ந்தபோது பெரும்பாலான மக்கள் கண்ணீர் துளிகளினால் 'இல்லை' என்ற பதிலைத்தான் அளித்திருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள தலைசிறந்த கல்விமான்களிலும், கல்லூரி அதிபர்களிலும் முதன்மையானவர் திரு. ஆனந்தராஜா. அவர் என்றைக்குமே, எப்போதுமே தமிழ் மாணவர்களுடைய நலன்களில் அக்கறை கொண்டவராக இருந்திருக்கிறார். மாணவர்களின் உரிமை பறிக்கப்பட்டபோதெல்லாம் அதை எதிர்த்து அரசிற்கெதிராகத் துணிந்து குரல்கொடுத்து வந்த ஒரே அதிபரும் அவர்தான்.

1979ம் ஆண்டில் தரப்படுத்தல் சட்டத்தை எதிர்த்து தமிழ்மாணவர்கள் ஒரு வார காலத்திற்கு பாடசாலை பகிஸ்கரிப்பையும், கர்த்தாலையும் மேற்கொண்டிருந்தனர். இறுதி நாளன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மாபெரும் பொதுக் கூட்டமொன்றையும் நடாத்தினர். இக்கூட்டத்தில் ஒரு பாடசாலையின் அதிபர் என்ற வகையில் கலந்து கொண்ட ஒரே அதிபர் திரு. ஆனந்தராஜாவேயாகும்.

அன்றைக்கு வந்த ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்ட மாணவர்களிடம் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிக் கொண்டபின்னரே அவர்களை பாடசாலைக்குள் அனுமதிக்க வேண்டுமென அரசாங்கம் பணித்தபோது—ஏனைய பாடசாலைகளில் அந்த நடைமுறை கையாளப்பட்டபோதும்கூட—யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் மட்டும் மன்னிப்புக் கடிதம் வாங்காமலேயே மாணவர்களைக் கல்லூரிக்குள் அனுமதித்ததும், மன்னிப்புக்கடிதம் வாங்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் இந்தப் பணிப்புரையை ஆசிரியர் சங்கத்தைக் கூட்டி எதிர்த்ததும், திரு. ஆனந்தராஜாவே.

யாழ்ப்பாணத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பத்தில் உதவிஅதிபராக இருந்து, அதிபரான திரு. பூரணம்பிள்ளை ஓய்வு பெற்றதும், அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திரு. ஆனந்தராஜா B.Sc. (London) Dip. in Education ஆகிய பட்டங்களைப் பெற்ற தலைசிறந்த கல்விமானாவார். திரு. பூரணம் பிள்ளைக்கு நிகராக யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியையும், அதில் கல்விகற்ற மாணவர்களின் கல்வித் தரத்தையும் திறம்பட வளர்த்தவர். அவர் எப்போதுமே மாணவர்களுடைய கல்வியிலும், அவர்களுடைய முன்னேற்றத்திலும், தனிப்பட்ட முறையிலேயே அதிகமான அக்கறை செலுத்தி வந்திருக்கிறார். கல்லூரி அதிபராக இருந்தும்கூட தானே சென்று உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பாடங்கள் நடத்தியும் வந்திருக்கிறார்.

எந்த ஒரு மாணவனோ அல்லது அவர்களுடைய பெற்றோரோ கல்விச் சான்றுகளுக்காகவோ, அத்தாட்சிப் பத்திரங்களுக்காகவோ, எந்த நேரத்தில் சென்றாலும், (இரவு அகால நேரத்தில்கூட சென்று கேட்டாலும்) முகம் சுழிக்காமல் வந்து தனது கைப்படவே எழுதி தட்டச்சில் பொறித்து கொடுப்பவர் திரு. ஆனந்தராஜா.

இப்படிப்பட்ட தமிழ் மாணவர்களின் நலனிலே அக்கறை கொண்ட தலைசிறந்த கல்விமானான ஒருவர் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்க முன்வருவாரா? என்பதை ஒவ்வொரு பெற்றோரும், மாணவரும், ஒவ்வொரு போராளியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு கல்லூரி அதிபர் என்ற முறையில் இருந்து அவர் இராணுவத்தினரை அழைத்து மாணவர்களுடன் உதை பந்தாட்டம் நடத்துவித்தார்—என்றால் இராணுவத்தினருக்கு எம்முடைய நிலைப்பாட்டைப் புரிய வைத்து அவர்களை எம்பக்கம் இழுத்து அவர்களிடமிருந்து எமக்குவேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் அடிப்படையில்கூட அது இருந்திருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com

அல்லது அவர் அப்படி இராணுவத்தினரை அழைத்து விளையாட வைத்தது தவறு என்றால் கூட அதை அவருக்கு உணர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம்.

அதை விடுத்து எடுத்தவுடனேயே எல்லாப் பிரச்சினைகளுக்கும், துப்பாக்கிச்சூடும், மின்கம்ப மரண தண்டனையையும் வழங்கிவிட்டு பின்னர் அதை நியாயப்படுத்த போலிக்காரணங்களை வலிந்து சேர்ப்பது விடுதலைப் புலிகளின் அரசியல் வறுமையையே எடுத்துக்காட்டுகிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நட்பு வைத்துக்கொண்டது தவறு என்று நியாயம்பேசும் விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கு குறிப்பாக அவ்வியக்கத்தின் தலைவர் திரு. பிரபாகரனுக்கு அரசியல் ஆலோசகராக இருப்பவர் திரு. சொர்ணலிங்கம் என்கின்ற சங்கர். இதே சொர்ணலிங்கம் 1979ம் ஆண்டிலிருந்து 1983 ஜூலை திங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ''ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழகம்'' ( Joly Boy's Sports Club, Vavuniya. ) என்ற அமைப்பின் முக்கியதலைவராகவும், ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளராகவும் இருந்துகொண்டு வவுனியாவில் தமிழ் இளைஞர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் பல விளையாடுப்போட்டிகளை ஒழுங்கு செய்து நடாத்தியிருக்கிறார். வவுனியாவில் மிகச்சிறப்பாக செயற்பட்டு மலையக மக்களுக்கு மறுவாழ்வு கொடுத்துவந்த காந்திய இயக்கம் அழிக்கப்படுவதற்கும், பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்து சிறையில் அடைப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதைப் படுவதற்கும், சுட்டுக் கொல்லப்படுவதற்கும் காரணமாக இருந்த பொலீஸ் அத்தியட்சகர் ஹேரத்தை அழைத்து விருந்து வைத்து தமிழருக்கும் சிங்களவருக்கும் இணைப்புப் பாலத்தை ஏற்படுத்த முயன்றவர். வவுனியா ஐ. தே.க. அமைப்பாளராகவிருந்த புலேந்திரனோடு இணைத்து இன்றைய பிற்போக்கு ஜே.ஆர். ஆட்சியின் தரகராகவும் செயற்பட்டவர்.

இப்படி இராணுவம், பொலீஸ் அரசு ஆகியவற்றுடன் கூட்டுவைத்துக் கொண்ட ஒருவரை தமது அரசியல் ஆலோசகராக ஏற்றுக்கொண்டு செயற்பட்டு வரும் விடுதலைப் புலியினர், இராணுவத்தினரோடு கூட்டு வைத்துகொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் திரு ஆனந்தராஜாவுக்கு எப்படி மர தண்டனை விதிக்க முடியும்? என்பதே பெரும்பாலான மக்களின் கேள்வியாகும்.

உண்மையில் ஒட்டுமொத்தமாக ஒப்பு நோக்கிப் பார்க்கின்றபொது திரு ஆனந்தராஜா மாணவர் நலனில் அக்கறை கொண்ட ஒரு கல்லூரி அதிபர் எப்படி செயற்பட்டிருக்க வேண்டுமோ அப்படி செயற்பட்டிருக்கின்றார். அவருடைய அனைத்து செயற்பாடுகளுமே மாணவர் சமுதாயத்தை முன்னேற்றும் விதத்திலேயே அமைந்திருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளால் திரு. ஆனந்தராஜாவிற்கு வழங்கப்பட்ட மரணதண்டனை தனிப்பட்ட கோபதாபத்தின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட தனிநபர் பழி வாங்கலே, அன்றி வேறில்லை என்பது மறுக்கமுடியாதது.

பயங்கரவாதத் தடைச்சட்டம், தரப்படுத்தல் போன்றவற்றால் ஸ்ரீலங்கா அரசு தமிழ் மாணவர்களையும், அவர்களது கல்வி உரிமைகளையும், நசுக்கி வருகின்ற நேரத்திலே அரசபடைகளின் அட்டூழியங்களினால் கல்விசாலைகளும், நூல் நிலையங்களும் அழித்து ஒழிக்கப்படுகின்ற சூழ்நிலையிலே தலைசிறந்த கல்விமான்களும், அறிவாளிகளும், நிபுணர்களும் தனிநபர் பழி வாங்கல்களுக்காக சுட்டுக் கொல்லப்படுவது எமது இனத்திற்கும், எமது மாணவர் சமுதாயத்திற்கும் ஈடுசெய்யமுடியாத எவ்வளவு பெரிய இழப்பு என்பதை ஒவ்வொரு பெற்றோரும், மாணவரும், போராளியும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே தமிழ் மக்களுடைய எதிர்கால கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் நலன்களைப் பற்றிச் சிறிதுகூட சிந்திக்காமல் அறிஞர்களையும், கல்விமான்களையும், நிபுணர்களையும், தனிநபர் பழிவாங்கல்களுக்காக படுகொலை செய்து வரும் சுத்த இராணுவக் கண்ணோட்டமுடைய பிற்போக்குவாத இயக்கங்களின் இத்தகைய நடவடிக்கைகளை வன்மையாக கண்டிப்பதுடன் எமது மக்களும் இவர்களை இனம் கண்டு கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**எமது துப்பாக்கிகள் எதிரியை நோக்கியே இருக்கட்டும்**
**எம்மவரை நோக்கி அல்ல.**

தமிழீழம்.
1-7-85.

**தமிழீழ மாணவர் பேரவை (TESO)**

படிப்பகம்